# தமிழினத்தைக் காப்பாற்றக் கூடியது சமய உணர்ச்சியே!



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**சித்திரை மாதம்** (May 2016)

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117**

காணிக்கை ரூ.10/-

# உள்ளுறை

1. தமிழினத்தைக் காப்பாற்றக் கூடியது அரசியல் உணர்ச்சியா? சமுதாய உணர்ச்சியா? சமய உணர்ச்சியா?
2. புரிந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள். [இந்து மறுமலர்ச்சி இயக்க வீரர் சிந்தனைக்கு]
3. சோதனை + வேதனை = சாதனை; குருதேவர் அறிக்கைக்கு வழங்கப் பட்ட முன்னுரை.
4. பதினெண்சித்தர்களின் வழி வந்ததே பஞ்சாப்பின் குருபாணி!
5. சித்தர் தரும் வரலாற்றுச் சிந்தனை. (முற்றிலும் ஆய்வுக்குரியது)
6. பதினெண்சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழு. Pathinen Siddhar’s Medical Research Society.
7. சித்தர் தரும் களஞ்சியம்.

# தமிழினத்தைக் காப்பாற்றக் கூடியது அரசியல் உணர்ச்சியா? சமுதாய உணர்ச்சியா? சமய உணர்ச்சியா?

**[உலக மார்க்சீய மாமேதை எம்.பி. பிள்ளை எனப்படும் சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்டது.]**

தமிழர்களின் **அரசியல் உணர்ச்சி**; நிறைந்த ஏட்டறிவையும், முறையான பட்டறிவையும், அநுபவமிக்க தன்னலமற்ற வீரத் தலைமையையும் பெற முடியாமல்; கூவம் ஆறு சாக்கடையாக மாறியது போல் வீணாகி விட்டது. இன்று வரை அரசியலுணர்ச்சியைத் தன்னலமிக்க தலைவர்கள் தங்கள் தங்களின் வள வாழ்வுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும் இழிநிலைதான் செழித்து வருகிறது.

பொதுமக்களுக்கு அரசியல் அறிவே (The Political Knowledge) ஏற்படாதவாறு பாதுகாப்பதுதான் அரசியல்வாதிகளின் தலையாய தொண்டாக இருக்கிறது. எனவே, அரசியல் உணர்ச்சியால் தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

தமிழினத்தின் **சமுதாய உணர்ச்சி** முழுக்க முழுக்க மேல்நாட்டின் நாத்திகக் கருத்துக்களைத் திருடியவர்களின் தலைமையாலேயே வளர்க்கப் படுகிறது. மேலும், முறையான ஆராய்ச்சியோ, நிறைவான ஆதரவோ இல்லாத குருட்டுத் தனமும், முரட்டுத் தனமும் மிக்க வறட்டுப்

போக்குடைய வெறியர்களே; பெரும்பாலும் தமிழினச் சமுதாய உணர்ச்சியை இயக்குபவர்களாக இருந்து வருகிறுர்கள்.

எனவே, சமுதாய உணர்ச்சியின் பெயரால் நாத்திக வெறியும், பழமை மறுப்பும், மொழிப் பழிப்பும், நன்மை நல்கு தொன்மைமிகு இந்துமத அழிவும், அன்னியர்களிடம் அடிமையாதலுமே வளர்க்கப் படுகின்றன. இதனுல், மிகமிகச் சிறிய ஒருசில கும்பல்களே சமுதாயச் சீர்திருத்தத்தின் பெயரால் பொழுதுபோக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்திக் காலம் கடத்தும் அவலக் கேவல நிலைகள் தமிழினத்தில் வளர்ந்து விட்டன. எனவே, பெரும்பாலான மக்களின் மனதைப் புண்படுத்திடும் சிறுபிள்ளைகளின் விளையாட்டுப் போக்கில் வளர்க்கப் பட்டு வரும் சமுதாய உணர்ச்சியால்; தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ... என்பனவற்றை முறையான தத்துவங்களாலும், நிறைவான செயல் சித்தாந்தங்களாலும் ஆரம்பம் முதல் இறுதி வரை பண்படுத்திடும் சமய உணர்ச்சி; இலைமறை காய் போல் வாழும் ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும், அருளாளர்களாலும், ஆன்மீகப் பேரறிஞர்களாலுமே கட்டிக் காக்கப் படுகின்றது. எனவே, இந்தச் சமய உணர்ச்சியின் விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சிமிகு வளர்ச்சியாலும், மலர்ச்சி மிகு செழிச்சியாலுமே தமிழினத்தைக் காப்பாற்ற முடியும்! முடியும்! முடியும்!

தமிழினத்து அரசியல் வாதிகளும், சமுதாய வாதிகளும், ஏறத்தாழக் கண்மூடித்தனமாகத் தங்களின் தலைவர்களைப் பின்பற்றுபவர்களாகவே இருக்கிறுர்கள். இதற்கு மேலாகத் தங்களின் இயக்கத்தின் கொள்கை (Policy and Principle), குறிக்கோள் (Aim), தத்துவம் (Philosophy), சித்தாந்தம் (Theology or way of approaches and attitudes), ...

என்னவென்று தெரிந்து கொள்ளாமலேயே இயக்கங்களில் வெறியோடு ஈடுபடுபவர்களாகவே இருக்கிறார்கள்.

எனவேதான், பெரும்பாலும் அரசியல் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும், சுயநல மிக்க சுகபோக வாழ்வுக்குரிய சந்தர்ப்ப வாதிகளாக ஏகபோக வாழ்வு வாழுகிறார்கள். இவர்களை விமரிசிக்க யாருக்குமே துணிவில்லை! துணிவில்லை! துணிவில்லை! துணிவேயில்லை! எனவே, தமிழினத்தின் அரசியல் உணர்ச்சியும், சமுதாய உணர்ச்சியும் விரல்விட்டு எண்ணக் கூடிய தனிமனிதர்களின் இன்ப வாழ்வுக்கு மட்டுமே பயன்படக் கூடியவைகளாகத்தான் இருக்கின்றன.

அதனால், தமிழினத்தின் அகப் பண்பாடாகவும், புற நாகரீகமாகவும் இருக்கின்ற **மெய்யான இந்துமத**த்திற்கு உரிய **சமய உணர்ச்சியால்தான் தமிழினத்தைக் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்!**

**//மூலம்: குருதேவர் அறிக்கை எண்: 32//**

**"இம்மண்ணுலக வாழ்வின் உறவு, உரிமை, சொந்தம், சொத்து, பந்தம், பாசம் ... வென்றவர்களே பிறப்பறுத்துப் பேரின்ப நிலை பெற முடியும். அது உடனே நடக்காது. பல கோடி பிறப்புக்கள் எடுக்க வேண்டும். குருவும் திருவும் ஒன்றாக தம்முள் கருக் கொண்டவரே நாற்பத்தெட்டு வகை வழிபாடு நிலைகளைப் பெறுகின்றனர். இதற்குப் பதின்மூன்று வகையான அருளாளர் நிலைகளைப் பல பிறப்புக்களில் கடத்தல் வேண்டும்."**

**- குருபாரம்பரியம்.**

**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் வழங்கியது.**

# புரிந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள்

**[இந்து மறுமலர்ச்சி இயக்க வீரர் சிந்தனைக்கு]**

**காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை.**

1) எமது மாமனுரும், இ.ம.இ.யின் முதல் தலைவருமான கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமி பிள்ளையிடமிருந்து இ.ம.இ.யின் பொறுப்புக்களை ஏற்றதும்; யாம் இ.ம.இ. வீரர் சிந்தனைக்கு விடுத்த அழைப்பு வேண்டுகோள் மடல்களுள் ஒன்று இது.

2) இ.ம.இ.க்கு இமயம் முதல் குமரி வரை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், முழு நேரச் செயல்வீரர்களும், அ.வி.தி. நிலையங்களும், வழி நடத்தும் அருளாளர்களும் நிறைய இருந்தும் கூட; இந்த இயக்கம் உலகறிய வெளிப்பட்டுச் செயல்படாமல் இலைமறை காயாகவே இருநூறு ஆண்டுகளாக இருந்து வருவது ஏன்? மாற்று மதங்களோடு சண்டைச் சச்சரவோ, போராட்டமோ, போரோ உருவாகி விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த இலைமறை காய் நிலை என்ருல்; அனைத்து மதத்தவர்களையும் அருளை அநுபவப் பொருளாக அடையச் செய்யக் கூடிய **‘சீவநெறி’** எனும் சித்தர்நெறியை எங்கும் வித்திட்டு வளர்த்திடலாமே!?

3) இ.ம.இ.யின் சித்தாந்தம் சுரண்டல் அற்ற, சர்வாதிகாரம் அற்ற, ஏழை பணக்காரர் வேறுபாடு அற்ற, ஏற்றத் தாழ்வு அற்ற, அடிமை நிலை அற்ற, மிடிமை நிலை அற்ற, ... **சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்** அமைப்பதே ஆகும். இதற்காகத்தான் மதங்களுக்கிடையில் மறுப்பு வெறுப்போ! நகைப்புப் பகையோ! போட்டி பொருமையோ! சண்டைச்

சச்சரவோ! நேரடிப் போரோ! நிகழ்ந்திடாமல் தடுத்து நிறுத்தி உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் பணிதான் இ.ம.இ.யின் செயல் சித்தாந்தமாக ஆக்கப் பட்டிருக்கின்றது.

இருந்த போதிலும், **இந்து** என்ற சொல்லால் இந்த இயக்கம் இந்து மதத்திற்கு மட்டுமே உரியதாகத் தவறுக எண்ணுபவர்கள் அதிகமாக இருக்கிருர்கள். எனவே, ‘இந்து’ என்ற சொல் பொதுவாக ‘மதம்’, ‘சமயம்’, ‘ஆவி’, ‘ஆன்மா’, ‘ஆருயிர்’, ‘மனிதப் பண்பு’, ‘மனித வாழ்வு’, ‘உண்மை’, ‘அழகு’, ‘இனிமை’, ‘அன்பு’, ‘நட்பு’, ‘தோழமை’, ‘பற்று’, ‘பாசம்’, ‘அமைதி’, ‘அடக்கம்’, ‘கட்டுப்பாடு’, ‘கடமை’, ‘கண்ணியம்’, ‘கூடி வாழல்’, ‘பிறர்க்குக் கேடு செய்யாமை’, … முதலிய நற்பண்புகளேக் குறிக்கின்றது என்ற பேருண்மையைத் தமிழகத்துக்குள் இருப்பவர்களுக்குக் கட்டாயமாக அறிவித்தும், உணர்த்தியும் நடைமுறைப் படுத்த வேண்டும். இந்தியத் துணேக் கண்டம் முழுவதும் உணருமாறு செய்ய வேண்டும்! உலகம் முழுவதும் அறியுமாறு செய்ய வேண்டும்!

4) ‘ஒவ்வொருவரும் தான் வாழ ஒரு தாழ்வாரத்தையாவது (ஒரு வீட்டின் முன் அல்லது பின் பகுதி) சொந்தமாகப் பெற்றிருத்தல் வேண்டும். பிறகுதான், பொதுப்பணியில், அருட்பணியில் … ஈடுபட வேண்டும்’ என்பதுதான் குருபாரம்பரிய வாசகம்.

***“தனக்கெனத் தாழ்வாரம் ஒன்றில்லார்க்குத்***
***தேவாரப் பணி ஏதுக்கடி குதம்பாய்”***

*- குதம்பேய்ச் சித்தர்.*

என்ற குதம்பேய்ச் சித்தர் பாடல் இக் குருபாரம்பரியச் செய்தியினே எளிமையாக விளக்குகின்றது. அதாவது, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ருல்; ‘உலக மதத் துறையின் மறுமலர்ச்சி இயக்கம்’ (The International Religious Renaissance Movement) என்றுதான் பொருள் என்பதை அனேவரும் உணருமாறு செய்ய வேண்டும். அப்பொழுதுதான், உலக அளவில் மொழி விடுதலே, இன விடுதலே, பண்பாட்டு விடுதலே, நாகரீக விடுதலே, மத விடுதலே, நாட்டு விடுதலே, … என்பவை எல்லாம் தனித் தன்மையோடும்,

உரிமையோடும் பேணப்படும். இதன்படியே, முதலில் தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, ... முதலியவை யெல்லாம் உரிமையோடும், பெருமையோடும் வாழ்வு பெற வேண்டும். அப்பொழுதுதான், இ.ம.இ. உலக அளவில் மனித இனத்துக்கு நன்மை செய்யக் கூடிய ஓர் இயக்கமென்பது உணரப் படும், நம்பப் படும்.

எனவேதான், தமிழ்நாட்டை, தமிழினத்தை, தமிழ்மொழியை, தமிழர் மதத்தை நாற்றங்காலாகப் பயன்படுத்தி இ.ம.இ.யின் தத்துவ வித்துக்களைத் தயாரிக்கும் விதைப் பண்ணையையும், இ.ம.இ.யின் தத்துவக் கன்றுகளை, இளஞ்செடிகளைத் (Nursery Garden) தயாரிக்கும் நாற்றுப் பண்ணையையும் உருவாக்க வேண்டும். இதற்குரிய செயல்திட்டங்களை உருவாக்குபவர்களாகவே நாம் இருக்க வேண்டும். அதாவது, இந்த 'இருபதாம் நூற்றுண்டுச் சிந்தனைகள்' என்று தலைப்பிட்டுப் பட்டியலிட்டுக் காட்டக் கூடிய அளவிற்குப் புதிய புதிய சிந்தனைகளை ஏட்டளவிலாவது உருவாக்கிடும் ஆற்றல் மிக்கவர்களாக வேண்டும் நாம்.

5) நம்மவர்களுக்கிடையிலே பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அடிக்கடி சந்தித்துப் பேசிக் கலந்து முடிவெடுத்துச் செயல்படலும், எக்காரணம் பற்றியும் யாருக்கும் யாரிடத்தும் வெறுப்போ, மறுப்போ, பகையோ, போட்டியோ, பொறாமையோ, ... ஏற்படாமல்; விட்டுக் கொடுத்துக் கட்டுப்பாடோடு செயல்படலும், ... வளர வேண்டும்! வாழ வேண்டும்! அப்போதுதான் இதுவரை உருவாகாத சாதனை நிலைகளையெல்லாம் உருவாக்கிட முடியும்.

6) நம்மவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசி கோயில்களில் சன்னிதான உடையில் ஒருவர் இருவரென்று அடிக்கடி உலா வந்திடல் வேண்டும். அவ்வப்பொழுது ஆர்வத்தோடு உரையாட வருபவர்களிடம் மட்டும் இ.ம.இ.யின் தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும் விளக்கியுரைத்தால் போதும். மிகமிக விரைவில் தமிழகமெங்கும் தேவையான அளவு மக்கள் இ.ம.இ.யைப் புரிந்து பேராதரவு தர முன் வந்திடுவார்கள்.

அப்படிப்பட்டவர்களிடம் (சந்தா தொகை) உறுப்பினர் கட்டணம் பெற்று உடனே அவர்களை இ.ம.இ.யின் அதிகாரப் பூர்வமான அங்கத்தினர்களாக்கிடல் வேண்டும்.

அத்துடன் அவர்கள் ஒவ்வொருவரும் அன்றாடம் பூசை செய்து அருளை அநுபவப் பொருளாகப் பெற்று வாழ்ந்திட உரிய பெரிய வழிவகைகளைக் குருதேவர் மூலம் உருவாக்கிடல் வேண்டும். அப்பொழுதுதான் கோயில்களும், சுடுகாடுகளும், சமாதுகளும், மற்றக் கருவறைகளும் புத்துயிர் பெற்று அருட் புரட்சி உருவாகிட உதவிட முடியும்.

7) நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே அன்னியர்களுக்குத் தமிழர்களை அடிமையாக்கும் பணியைத்தான் செய்கின்றன. ஏறத்தாழத் தமிழனைத் தலைவனாகக் கொண்ட கட்சிகளே நம் நாட்டில் இல்லை. அதாவது, தமிழக அரசியல்வாதிகள் அன்னியர்களின் கட்சிகளுக்கு கங்காணிகளாக, ஏசண்டுகளாக (Agents), பதிலிகளாக (Representatives), கூலிகளாக (Coolies), அடிமைகளாக (Slaves) மாறுபவர்களாகவும், பிறரை மாற்றுபவர்களாகவும்தான் இருக்கிறார்கள்.

எனவே, இவர்கள் திருந்தவும், இவர்களைத் திருத்தவும் **மெய்யான இந்துமத** வரலாறுகளையும், இலக்கியங்களையும் நூல்களாக அச்சிட்டு வழங்குவதோடு; சொற்பொழிவுகளின் மூலம் பரப்பிடல் வேண்டும். இப்படிச் செயல்படத் தலைமையிடம் அளப்பரிய பத்தியும், பணிவும், உண்மைப் பாசமும், பற்றும் உள்ள அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்!

ஆனால், இன்றைய நடப்பில் பொழுதுபோக்குக்காகவும், தங்கள் தங்களின் செல்வாக்குக்காகவும், புகழுக்காகவும் செயல்படுபவர்களே அதிகமாக இ.ம.இ.யில் இருக்கிறார்கள். இதற்குரிய மருத்துவம் துணிச்சலாகச் செய்யப்பட்டேயாக வேண்டும்.

8) பிறமண்ணினரான பிருமணர்கள் மிகவும் அடக்கமான, அறிவு நுட்பம் மிக்க அறிவியல் விலங்குகள். இவர்கள் தாங்கள்

தமிழகத்தில் வாழ வேண்டுமேயானுல், தமிழகத்தில் பல அன்னியர்களும் வாழ வேண்டும் என்ற பேருண்மையை நன்கு உணர்ந்தவர்கள். எனவேதான், இவர்கள் எந்த அன்னியர் தமிழகத்திற்கு வந்தாலும், உடனே அவர்களுடன் இரண்டறக் கலந்து; அவர்களைத் தங்களுக்குத் துணையாக்கிக் கொண்டிடுகிருர்கள். அவர்களுக்கு அனைத்து விதமான அன்பளிப்புக்களையும் இரகசியமாக வழங்கி; அவர்களோடு இணைந்து தமிழர்களைத் தாழ்த்திச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழ்ந்திடுகின்ருர்கள்.

இதேபோலத்தான், இவர்கள் தமிழர்களுக்கு மொழிப்பற்ருே, மொழிப்பாசமோ, மொழியார்வமோ, மொழியுரிமையோ, மொழிப்பெருமையோ, மொழியறிவோ,... நிலையாக ஏற்பட்டு விடாமல் இருக்கத் தங்களின் சமசுக்கிருத மொழியைத் தேவமொழியென்றும், பூசைமொழியென்றும், அருட்சத்தி மொழியென்றும் புகழ்ந்து, புகழ்ந்து **திசைதிருப்பல்களை** வளர்க்கிருர்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாகத் “தங்களின் சமசுக்கிருத மொழியிலிருந்துதான் தமிழ்மொழி தோன்றியது” என்ற ஒரு மோசடியான கருத்தையும் பரப்பி வருகிருர்கள். இந்த முயற்சிகள் நிலைத்து நிற்பதற்காகத் தமிழர்களுக்கு ஆங்கில மொழியில் மோகத்தையும்; இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும்; செயற்கை நெருக்கடிகளாகவும், போராட்டப் பிறச்சினைகளாகவும் உருவாக்கி விட்டார்கள்.

இதனுல் தமிழர்கள் தமிழ்மொழியை ஆழமாகக் கற்கவும்; தமிழிலக்கியங்களில் அகன்ற புலமை பெற முடியாமலும் செய்கிருர்கள். எனவே, பிறமண்ணினரான பிருமணர்களை நேரடிப் போரில் சந்தித்து வெற்றி கண்டால்தான்; தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள அனைத்து வகையான வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும், நலிவுகளையும், மெலிவுகளையும், இழிவுகளையும், அழிவுகளையும், முடக்கங்களையும், மிடிமை நிலைகளையும், அடிமை நிலைகளையும், துரோக நிலைகளையும், விரோத நிலைகளையும் முழுமையாக அகற்ற முடியும்! அகற்ற முடியும்! அகற்ற முடியும்! ...

அதாவது **கட்டுச் சோற்றில் எலியை உயிரோடு சேர்த்து வைத்தது போல**; பிருமணர்கள் தமிழினத்தாரோடு வாழும் வரை தமிழர்கள் உய்வு பெறவே முடியாது! முடியாது! முடியாது! எனவே, இதற்குரிய காரண காரியங்களையும், செயல்நிலைகளையும் ஆராய்ந்து அறிந்து விளக்கிடுவதுதான் இ.ம.இ.யின் கடமை.

அதாவது, தமிழ் மொழி மட்டுமே சமய, சமுதாய, அரசியல், தொழில், கலை, கல்வி, ... முதலிய அனைத்துத் துறைகளிலும் முழுமையாக ஆட்சி செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அன்னியர்களின் ஊடுருவல்களையும், அன்னியர்களால் உருவாகும் துரோக விரோதங்களையும் ஒழிக்க முடியும்.

9) எல்லா மொழிகளிலும், தமிழ் மொழியில் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள பூசாமொழிகளையும், விதிகளையும், வாசகங்களையும், அருளூறு செயல்களையும் ஒலிநயம் குன்றாமல் மொழிபெயர்க்க வேண்டும். தமிழ்மொழியின் அருளாற்றலை அனைவரும் அறியச் செய்ய வேண்டும். **தமிழகத்துக்குள் அன்னிய மொழிகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும்.** அப்பொழுதுதான் தமிழகத்துக்குள் அன்னியர்களே இல்லாத நிலை தானாக உருவாகிடும். இதற்காக அன்னிய மொழியினர் கட்டாயமாகத் தமிழ்மொழி வழியாகத்தான் வாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கியேயாக வேண்டும்.

அதற்குரிய அரிய பெரிய செயல்நிலைகளே; இ.ம.இ. அங்கத்தினர்களுக்கிடையில் பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், கட்டுப்பாடும், தலைமையை மதித்துச் செயல்படலும் பசுமையாக வளவளர்ச்சி பெற வேண்டும்! பெற வேண்டும்! பெற வேண்டும்! இவற்றையே, யாம் பொறுப்பேற்றதும் எமது கருத்துரையாக வழங்குகிறோம்.

**காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர்**
**காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை**
**இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர்.**

**//மூலம்: குருதேவர் அறிக்கை எண் 33, 34//**

# <u>சோதனை + வேதனை = சாதனை</u>

**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**
**பதினெண்சித்தர் பீடம், மடம்.**

இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்களே! அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களே! தமிழ்மொழி, இன, நாட்டுப் பற்றாளர்களே! இந்துமத வாய்மையாளர்களே! அருளுலக ஆர்வலர்களே! ஆதரவாளர்களே! ஏந்தாளர்களே! ***எதிலும் ஈடுபாடற்ற நடுநிலைப் போக்கு உடையவராய் உள்ள எம் தாயகப் பெருமக்களே!*** *நாட்டில் என்ன நடக்கிறது என்று எண்ணிப் பார்க்கத் தெரியாமல் இளமை வேகத்திலும், மோகத்திலும் வாழும் எம்மினத்து இளைஞர்களே!* ... உங்கள் அனைவர்க்கும் சில மாத நெடிய இடைவெளிக்குப் பிறகே நமது இயக்க 'குருதேவர்' ஏட்டின் மூலம் செய்திகளையும், கருத்துக்களையும் வழங்க முன் வந்துள்ளோம் யாம். இது ஒரு பெரிய சோதனையே! நம்மவர்களோடு 'குருதேவர்' அறிக்கையின் மூலம் தொடர்பு கொள்ள முடியாமற் போனது சொல்ல முடியாத வேதனையே! இருந்தாலும், இச் **சோதனையும், வேதனையும் நல்ல பல சாதனைகளை வழங்கியுள்ளன** என்பதனைப் பெருமகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் யாம்.

யாம் தனித்த எம் முயற்சியிலும் ஈடுபடாமல் தகுதியுடையார் எவர் கிடைத்தாலும் சரி, அவர்களை யெல்லாம் ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒருமுகப்படுத்தியே செயல்படுத்துகிறோம். இருந்த போதிலும் எமக்குக் கிடைக்கக் கூடியவர்களின் தரம், திரம், தீரம், திறம், ... முதலிய பண்புநலன்களையும்; கொள்கைப் பற்று, குறிக்கோள் பிடிப்பு, செயல் உறுதி, **தலைமையிடத்து உள்ள அசைக்க முடியாத, அளக்க முடியாத நம்பிக்கை**, <u>தலைமையின் ஆணையைச் சொந்த</u>

பந்தப் பாச உணர்வுகளுக்கும், உலகியலின் மதிப்பீடுகளுக்கும், பிறரின் ஒப்புதல்களுக்கும் அப்பாற்பட்டு உடனுக்குடன் அப்படியே செயலாக்கிடும் செயலூக்க வீரம், ... முதலிய அரிய, சீரிய, பெரிய, நேரிய ஆற்றல்களையும் ... காலப்போக்கில் எடையிட்டே ஒவ்வொருவரிடமும் அவரால் செய்ய இயலக் கூடிய பணியினை ஒப்படைத்து வருகிறோம்.

எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன் கீழுள்ள பதினெட்டுக்கும் மேற்பட்ட நிறுவன நிர்வாகங்களையும்; இமயம் முதல் குமரி வரையுள்ள பரந்த இந்துமத இந்தியாவுக்குள் மட்டும் வளர்க்காமல்; இம்மண்ணுலகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்துக் கூட வளர்த்து வருகிறோம் யாம். இதனால்தான், ‘உலக ஆன்மநேய ஒருமைப்பாடு’, ‘உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’, ‘உலக இன விடுதலை இயக்கம்’, ‘உலக மொழி விடுதலை இயக்கம்’, ‘உலகப் பண்பாட்டு விடுதலை இயக்கம்’, ‘உலக மத விடுதலை இயக்கம்’, ... என்பனவற்றை எல்லாம் எம்மால் கொள்கை அளவோடு நிறுத்திடாமல்; செயலளவில் நுண்மையாகவும், திண்மையாகவும், அமைதியாகவும், நிதானமாகவும் நிறைவேற்றிட முடிகின்றது.

**எமது வெற்றி தனிமனித வெற்றியாகாது!**

யாம், தனிமனிதரல்ல! ஒரு மாபெரும் உலக இயக்கம்!

யாம், எம் காலத்து உலக வரலாறாகவே வாழுகிறோம்! வளருகிறோம்!

யாம், மனித இனத்தின் உயிர்த் தத்துவ வித்துக்களின் விதைப் பண்ணையாவோம்!

யாம், தமிழ்மொழி, இனம், நாடு எனும் முக்கோணச் சத்தி பீடத்தின் சீவனாவோம்!

யாம், தமிழின விடுதலையே இந்துமத விடுதலை என்ற தத்துவத்தின் மெய்ப்பொருளாவோம்!

யாம், தமிழ்மொழி அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழி என்ற உண்மையின் சான்றுவோம்!

யாம், மதமே மானுடத்தின் துய்ப்புக்கும், தூய்மைக்கும், வாய்மைக்கும், உய்வுக்கும் வழியென்ற தத்துவத்தின் விளக்கமாவோம்!

... [விரிவஞ்சி இவ் வாசகங்களை இவ்வளவில் நிறுத்துகிறோம்]

♦ **நமது தமிழ்மொழிதான் உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி;**

♦ **நமது இந்துமதம்தான் உலக விஞ்ஞானங்களுக்கும், மெய்ஞ்ஞானங்களுக்கும், பிற ஞானங்களுக்கும் தாய்;**

♦ **நமது தமிழினம்தான் இம் மண்ணுலகின் முதல் இனம், மூத்த இனம்;**

♦ **நம் தமிழர்கள்தான் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் தேர்ந்தெடுக்கப் பட்டு உருவாக்கப் பட்ட அருளுலக வித்துக்கள், சொத்துக்கள், வாரிசுகள், மூலவர்கள், காவலர்கள்;**

♦ **நமது அமுதத் தெய்வத் தமிழ்மொழியின் எழுத்துக்களுக்கும், சொற்களுக்கும், வாக்குகளுக்கும், வாசகங்களுக்கும்தான் நோய்களையும், பேய்களையும், நாள் கோள் மீன் பாதிப்புக்களையும், பிற நலிவு மெலிவுகளையும் போக்குகின்ற ஆற்றலுண்டு.**

இப் பேருண்மைகளை எடுத்துச் சொல்லியும், எமக்குக் கிடைப்பவர்கள் மூலம் செயலாக்கியுமே வாழுகிறோம்.

இப்படி யாம் <u>மாபெரும் அரிய சீரிய பெரிய நேரிய ... பணிகளுக்காக மாவீரர்களையும், அருட்படைத் தளபதிகளையும், அருட் பட்டாளத் தளபதிகளையும், அருட்சேனைத் தளபதிகளையும், அருட்பணித் தலைமை அலுவலர்களையும், அதிகாரிகளையும், ... தயாரிக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்</u>.... எனவேதான், யாம் உலகியல் மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், கடந்தும்,

அப்பாற்பட்டும், ... பலவகையான கடுமையான, கொடுமையான ... சோதனைகளை எல்லாம் செய்து உரியவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். இதனால், எண்ணற்ற வேதனைகளையும், மிகமிகப் பெரிய தோல்விகளையும், எதிர்பாராத ஏமாற்றங்களையும், போக்கிட இயலாத ஏக்கங்களையும் ... பெற்றிட நேரிடுகின்றது. இருந்தாலும் யாம் 1992-96க்குள் நிகழ இருக்கும் அருளாட்சி அமைப்புப் பணிக்காக விரல் விட்டு எண்ணக் கூடிய தளபதிகளை; அலுவலர்களை, அதிகாரிகளை, மாவீரர்களைத் தயாரித்தேயாக வேண்டும்! தயாரித்தேயாக வேண்டும்! தயாரித்தேயாக வேண்டும்!

ஒருவேளை எம்மால் யாம் எதிர்பார்க்கக் கூடிய பக்குவமுள்ளவர்கள் போதுமான அளவு தயாரிக்க முடியாமற் போகுமேயானால், அதற்காக யாம் ஏக்கமோ, ஏமாற்றமோ அடைய மாட்டோம்! அடைய மாட்டோம்!! அடைய மாட்டோம்!!! அடையவே மாட்டோம்!!!! அதாவது, யாம், எமக்குக் கிடைத்துள்ளவர்களை யெல்லாம் அவரவர் பக்குவத்துக்கும், ஆற்றலுக்கும், ஆர்வத்துக்கும், நம்பிக்கைக்கும், ... ஏற்பப் பலவகைகளாகப் பகுத்துப் பட்டியலிட்டு எண்ணற்ற சிறிய பெரிய அணிகளையும், குழுக்களையும், தனிமனிதச் செயல்நிலைகளையும் உருவாக்கிடுவோம்.

அப்படி உருவாக்கப் பட்டவைகளிடம் அருளாட்சி அமைப்புப் பணியின் பல்வேறு வகையான பொறுப்புக்களில் உரிய உயரிய பொறுப்புக்களைத் தேர்ந்தெடுத்தே ஒப்படைப்போம். அதிலும், பல பேராற்றல் மிக்க நல்லவர்களை அருளாட்சி அமைந்த பிறகும், அருளாட்சி சிறந்திட எப்படி யெப்படி உழைக்க வேண்டும் என்பதற்குரிய பயிற்சிகளையும் இந்த அருளாட்சி அமைப்புப் பணியின் போதே பெற்றிடும்படிச் செய்திடுவோம்.

எனவே, யாம் எக்காரணம் பற்றியும் ஒரு சிறு துரும்பைக் கூட, அதாவது ஒரு சாதாரண மனிதரைக் கூட வீணாக்கிட

மாட்டோம், வேண்டாமென்று ஒதுக்கிட மாட்டோம்! மாட்டோம்! மாட்டோம்! மாட்டவே மாட்டோம்!

ஆனால், இரகசியம் காக்கும் பண்பும், எல்லோருடனும் ஒத்துப் போய் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுமென்ற உண்மையான உள்ளுணர்வும்; தலைமையைத் தன்னுயிரென மதிக்கும் கருத்தும்; என்றைக்கும் கொள்கைக்கோ, குறிக்கோளுக்கோ துரோகமோ, விரோதமோ பெற்றிடாத சிந்தைத் தெளிவும்; இறுதி வரை உறுதியுடன் போராடும் நெஞ்சுரமும்; அருளுலக ஏட்டறிவும், பட்டறிவும் போதுமான அளவு பெற்றவரும், ... என்று சிறப்புத் தகுதிகளைப் பெற்றவர்களே இயக்கத்தின் உயிரோட்டமாகவும், முன்னேட்டமாகவும், மூல அணிச் சத்தியாகவும் செயல்பட அநுமதியும், ஒப்புதலும் பெற்றிடுவர். அதற்குத் தாத்தாக்கள் ஆத்தாக்கள், அம்மையப்பன், தேவிகள், ... முதலானோர்களின் பரிந்துரையும், முடிவுமே ஏற்கப்படும். இது பற்றி எல்லோரும் புரிந்து கொள்ள இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! ஏனெனில், **நமது இயக்கம் அருளாளர்களின் ஆணைகளால் இயங்கும் ஒன்றாகும்**.

யாம் இவ்வளவு தூரம் எம்மையும், எமது செயல்நிலைகளையும் பற்றி; தன்னிலை விளக்கம் கொடுப்பது பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும். ஏனெனில், நம்மவர்களுக்கிடையில் தனித்தனிக் குழு மனப்பான்மை (Groupism), தனிமனித ஆதிக்கங்கள் (Individual command), தேவையில்லாத போட்டி பொறாமைகள், சிலருக்கு மட்டும் குருதேவர் அதிகச் சலுகையும், ஆதரவும் தருவதாக வருத்தம்; பலர் குருதேவர் பிறரின் புகார்களை நம்பித் தம் மீது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதாக வருந்துவது; பலர் தங்களுக்குக் கண்டிப்புக்களும், தண்டனைகளும் வழங்கப் பட்டதைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் வருந்துதல், பலர் தங்களுடைய உழைப்புக்கும், ஊக்கத்துக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ற பயன் கிடைக்க வில்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமும் பெற்றிருத்தல்

... சிலர் தங்களால் முழுமையாகக் குருதேவரின் ஒப்புதலேயும், ஏற்புதலேயும் எதிர்பார்த்த அளவு விரைவில் பெற முடியவில்லேயே என எரிச்சலும், புகைச்சலும் அடைந்திருத்தல், ... என்று பல்வேறு நிலேயினர் இருக்கின்றனர். இவர்கள் அனேவரிடமும் முதற்கண் எமது வருத்தத்தையும், ஆழ்ந்த பரிகார நோக்குடைய மன்னிப்பையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம் யாம். இதைத் தவிர வேறு வழியில்லே.

அனேவரும் எமது அன்புக்கும், பற்றுக்கும், பாசத்துக்கும், மதிப்பிற்கும், வாரிசு நிலேக்கும் உரியவர்கள்தான். யாம் எல்லோரையுமே உலகியல் கடந்து, எந்த பீடாதிபதியும் செயல்படாத அளவு அச்ச கூச்ச இச்சை மாச்சரிய நிலேகளே வென்று எமது உரிமை வாரிசுகளாக்கவே முயலுகிறோம்.

ஆனுல், ஏறத்தாழப் பெரும்பாலானவர்கள் தங்கள் தங்களின் சொந்த விருப்பு, வெறுப்பு, கற்பனே, கருத்து, சூழல்... முதலியவைகளுக்கேற்ப எமக்குத் தொடர்ந்து சிறிய பெரிய தோல்விகளேயும், சோதனேகளேயும், வேதனேகளேயும் நல்கிடுகிறுர்கள். ஆனுல், யாமோ மகிழ்ச்சி மிகுந்த நிதானத்தோடும், அமைதியோடும் அனேத்தையுமே எமது சோதனே முயற்சிகளின் சாதனேப் பட்டியலில் குறித்து வைத்து; எமது வாழ்க்கையைச் சுவைமிக்க வரலாருகவும், இலக்கியமாகவும் வளர்த்து வருகிறோம்.

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்து; நம்மவர்கள் அன்புகூர்ந்து தங்களுடைய வெற்றி தோல்விகளுக்காகத் தங்களின் தலேவர், வழிகாட்டி, வழித்துணே, ... என்ற நிலேயில் இருக்கும் குருதேவரிடம் வருத்தப் பட வேண்டாம் என்ற வேண்டுகோளே மட்டும் விடுத்துக் கொள்ளுகின்றோம்.

எமது வாழ்வின் குறிப்பிட்ட நொடிகள் ... பல பெரிய பெரிய வீர காவியங்களாகும் தன்மையினே உடையவை. பாரத காலக் கண்ணனே விட, யாம், எமது கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்

முதலியவைகளுக்காகவே வாழுகிறோம் என்பதைப் புரிந்து கொண்ட பலர் நம்மிடையே இருக்கிறார்கள். அந்த நல்லவர்கள் **‘யாம் மானுடவியல் கடந்தும், உலகியல் கடந்தும், இரவு பகலாகப் பாடுபட்டுக் கொண்டே இருப்பதால்தான் அருளுலகச் சாதனைகள் மிகுந்து; எதிர்பார்ப்புக்கு அதிகமாகவே அருளாட்சி அமைப்புப் பணி எண்ணற்ற வெற்றிகளைப் பெற்று வருகின்றது’** என்ற பேருண்மைக்கு என்றென்றும் சான்றாகவும், ஊன்றாகவும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே நிறைவு காணுகிறோம்.

அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட்டிடல் வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து இம் முன்னுரையை நிறைவு செய்கிறோம் யாம்.

நம்மை மொழிப் பற்று, இனப் பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பற்று, மதப் பற்று, ... முதலியவைகள் ஒற்றுமைப் படுத்தும், ஒருமைப் படுத்தும், அருளாட்சி அமைக்கச் செய்யும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

**இந்துமதத் தந்தை, பதினெண்சித்தர் பீடம், மடம் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் நிறை யக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர் அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார்.**
**11/11/1987**

**//மூலம்: குருதேவர் அறிக்கைகள் இணைந்த வெளியீடு முன்னுரை குருதேவர் அறிக்கை எண்: 39-40-41.//**

# <u>பதினெண்சித்தர்களின் வழி வந்ததே பஞ்சாப்பின் குருபாணி!</u>

**- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் -**

பதினெண்சித்தர்கள்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்து வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டு மறைகளையும் (குருவாக்கு), வேதங்களையும் (குருவாசகம்), முறைகளையும் (பூசாவிதிகள்), நெறிகளையும் (குருமார் ஒழுக்கம், ஆச்சாரியார் மரபு, பூசாறி ஒழுகலாறு, குருக்கள் வாழ்க்கை) தங்களின் தாய்மொழியான தமிழ் மொழியின் அடிப்படையில் தோற்றுவித்தார்கள்.

இப்பேருண்மையினை உலக மொழிகளுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் "ஒப்பியல் ஆய்வு" (Comparative Study) நிகழ்த்தும் போது உணரலாம். குறிப்பாக மதத்துறையிலுள்ள சொற்களும், பூசை இலக்கியங்களும், பிறவும் இன்றுங் கூட கேட்ட அளவில் தமிழ் மொழிக்கு உரியனவாக இருப்பதை உணரலாம்.

தமிழிலுள்ள ஆழமான பொருளையுடைய அழகிய சொல்லே இசையைக் குறிக்கும் "**பண்**". இதனை அடிப்படையாகக் கொண்டே

பண்படுத்தப்பட்ட நிலம் = "பண்ணை",

பண்படுத்தப்பட்ட வாழ்வியல் முறை = "பண்பாடு",

<u>**பண்**படுத்தப்பட்ட பூசை வகை, முறை, நெறி, விதி, சட்டம், பழக்க வழக்கம், ஒழுகலாறு முதலிய அனைத்துமே **குரு**வால் உருவாக்கப் பட்டவை</u> என்பதால் "<u>**குருபாணி**</u>" என்ற சொல்லால் குறிக்கப் படுகின்றது.

இந்தியாவில் தோன்றிய அருளாளர்களில் மிகப் பெரிய திருக்கூட்டத்தை உருவாக்கிய அருளாளர் "<u>**குருநானக்**</u>" ஆவார்கள். <u>இவர் பதினெண்சித்தர்களின் வழியில் உருவான மிகப் பெரிய அருளாளர்</u>. இவரை, இ.ம.இயைத் தோற்றுவித்த கண்டப்பக்கோட்டை கருவூரார் சித்தர் ஏளனம்பட்டியார் அவர்கள்; '<u>முத்த சித்தர்</u>' என்றும் '<u>நவநாத சித்தர்</u>' என்றும் சிறப்பிக்கின்றார்.

குருநானக் அவர்கள் சித்தர்களின் முறைப்படி எழுதப்பட்ட குருவாசகங்களையும், எழுதாக் கிளவிகளான குருவாக்குகளையும் உருவாக்கியே சீக்கிய மதத்தை உண்டாக்கினர். பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் ஈன்றெடுத்த எண்ணற்ற மதங்களுக்குள் குருநானக் ஈன்றெடுத்த தத்துவமும் ஒரு மதமேயாகும்.

குருநானக் தான் உருவாக்கிய மதம் என்றென்றும் வளத்தோடும், வலிவோடும், பொலிவோடும், முழுமையான வாழ்வோடும் இருக்க வேண்டுமென்பதற்காக குருபாணி முறையைக் கடைப் பிடித்திட்டார். அதாவது அவர் எழுதிய குருவாசகத்தைப் படித்துக் காட்டி மதத்தை வளர்க்கக் கூடிய குருக்கள்களையும்; அவர் உருவாக்கிய குருவாக்குகளை ஓதிக் காட்டி மதத்தை வளர்க்கும் குருமார்களையும் உருவாக்கினர். இவர்கள் இருவரின் (குருக்கள், குருமார்கள்) பாணியே "குருபாணி". எனவே "குருபாணி" முறையில் இன்றைக்கு வாழும் இந்து மதமே "குருநானக்" உருவாக்கிய "சீக்கிய மதம்".

குருக்கள்களும், குருமார்களும் பூசாறிகள் போல் அல்லாமல் கோயிலிலேயே தங்கியிருக்க வேண்டும் என்ற நியதியை உருவாக்கினர். இவ்விருவருக்குரிய உடை, உணவு, தங்குமிடம் முதலிய அனைத்தும் கோவிலுக்குள்ளேயே தரப்பட வேண்டுமென்றும் நியதி வகுத்திட்டார். எனவேதான் குருபாணி முறையால் சீக்கிய மதம் வலிமையான கட்டுப்பாடுகளோடும், வளமையான சட்டதிட்டங்களாலும் நிலையாக இருக்கிறது. இந்த முறை மீண்டும் இந்து மதத்துக்குள் வந்தால்தான் இந்துமதம் மறுமலர்ச்சியடைந்திடும்.

**தமிழகத்தில் எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் குருபாணி முறை மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும்**. அதாவது பகலில் ஆறுகாலமும், இரவில் ஆறுகாலமும் தவறாமல் முறைப்படி குருக்கள் குருவாசகம் படிப்பதும், குருமார்கள் குருவாக்கு ஓதுவதும் நிகழ்த்தப்படல் வேண்டும்.

இந்தக் குருபாணி முறை மூலமே மீண்டும் தமிழக - இந்திய எல்லைக்குள் இந்துமதம் மறுமலர்ச்சியடையச் செய்திட முடியும்.

**//மூலம்: குருதேவர் அறிக்கை 8//**

# <u>சித்தர் தரும் வரலாற்றுச் சிந்தனை</u>

## <u>(முற்றிலும் ஆய்வுக்குரியது)</u>

***[கண்டப்பக் கோட்டை சித்தர் ஏளனம் பட்டியார் உ.இராமசாமிப்பிள்ளை எனும் கருவூரார் தமது கடைசி காலத்தில் எழுதிய குறிப்புக்களிலிருந்து]***

“.... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மூவேந்தர் ஆட்சியைக் காக்க அருட்படை திரட்டத் திட்டம் தீட்டியும் செயலாக்காததால்; <u>தமிழ்மொழி காத்த பாண்டிய பேரரசு முதலில் தமிழினப் பகைவர்களால் அழிக்கப் பட்டது</u>. இம் மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியில் ஒரு பகுதிதான் **சிலப்பதிகாரக் காப்பியத்தில் விளக்கப் படுகின்றது**.

அதாவது, இமயமலைச் சாரலில் இருந்த பிராகிருத மொழி பேசும் க<u>ள</u>ப்பிறர் தரை வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்த போது; கங்கை கடலோடு கலக்குமிடத்து இருந்த பாலிமொழி பேசும் க<u>ல</u>ப்பிறர் கடல் வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாகப் பூம்புகார்ப் பெருவணிகர் இருவரில் ஒருவர் மகனும், மற்றொருவரின் மருமகனுமான <u>**கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியால்;**</u> கண்ணகியின் பத்தினித் திறத் தெய்வீக ஆற்றலும், வணிகப் பெருங்குடியினரின் சீற்றமும் மதுரை மாநகரைப் *புயலில் அகப்பட்ட வாழைத் தோட்டமாக்கிற்று.*

அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சிறைப்படுத்திக் கொணர்ந்த ஆயிரக் கணக்கான பிறமண்ணினர் ஆகிய ஆரியர்கள் சூழ்ச்சி செய்து <u>கலப்பிறர்களைக்</u>

கடல் வழியாகவும், களப்பிறர்களைத் தரை வழியாகவும் பாண்டியப் பேரரசைச் சூறையாடச் செய்தனர்.

தமிழினம் பேணவும், தமிழ் மொழியை வளர்க்கவும், காக்கவும் முற்படும் மதுரை மாநகர் மீண்டும் தமிழ்மொழி வளர்க்கவோ, காக்கவோ முற்பட முடியாத அளவு தமிழுணர்வும், பற்றும், பாசமும், ஆற்றலும், ஆர்வமும்..... முழுமையாக அழிக்கப் பட்டன. தமிழ்ப் புலவர்கள் வெட்டியெறியப் பட்டார்கள், தமிழ்ச் சுவடிகள் எரிக்கப்பட்டன, தமிழ்ச் சங்க மாளிகைகள், தமிழ்ச் சுவடிக் கோட்டங்கள், பட்டிமன்றக் கூடங்கள், தமிழாசிரியர் கோயில்கள் (சமாதுகள்), தமிழ்ப் பள்ளிகள், தமிழ்க் குருகுலங்கள், கூத்து மண்டபங்கள், பாணர் இருக்கைகள், விறலிச் சாலைகள், தமிழ்வாணர் முற்றங்கள், தமிழ் மாணுக்கர் கூற்றங்கள் ........... என்பன எல்லாம் இடிக்கப்பட்டுக் கழுதையேர் பூட்டி உழப்பட்டன.

இப்படித் தமிழினப் பகைவர்கள் தமிழ் மொழியை வடிவும், வாழ்வும், வளமும், வலிவும், வரலாறும்.... இல்லாமல் அழித்தொழித்தே தமிழர்களைக் கோழைகளாகவும், அடிமைகளாகவும் ஆக்கினர். தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றோ! பாசமோ! பிடிப்போ! பெருமையோ! ஈடுபாடோ! உரிமையோ! இல்லாமல் செய்தால்தான் தமிழர்களை என்றென்றும் அடிமைகளாகவும், கோழைகளாகவும், போலிகளாகவும், கூலிகளாகவும் வைத்திருக்க முடியும் என்பதை உணர்ந்த பிறமண்ணினர் ஆகிய பிருமணர் எனும் ஆரியர்கள் சமசுக்கிருத மொழியை தமிழர்கள் உயர்ந்ததாக, பெரியதாக, அரியதாக, கடவுள் தன்மை உடையதாக, எல்லாவிதப் பூசைகளுக்கும் உரியதாக ஏற்கும்படிச் செய்தனர்.

அதாவது, தமிழை உரிமையிழக்கும்படி செய்வதும், தாழ்த்துவதும், பழிப்பதும், புறக்கணிப்பதும், வளராமல் தடுப்பதும், வலிமையடையாமல் செய்வதும்தான் தமிழர்களைக் கோழைகளாக, கூலிகளாக, காலிகளாக, ...... செய்திடும்.

சேர நாட்டையோ, சோழ நாட்டையோ அடிமைப் படுத்துவதை விடப் பாண்டிய நாட்டை ஆரிய மொழியாலும், ஆரியக் கூத்தாலும்,

ஆரிய மதத்தாலும், ஆரிய அழகாலும்.... என்றென்றும் அடிமைப்படுத்தி, வேறுபடுத்தி, கூறுபடுத்திச் சிதைப்பதிலேயே வடஆரியர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர்...”

- என்ற குருபாரம்பரிய வாசகம் கண்டுதான் தமிழ் வளர்ச்சிக்காக இலக்கண இலக்கியங்களைப் **படியெடுக்கும் பணியும்**; தமிழின் கடவுட் பண்பும், பிற பெருமைகளும் உணரப் படுவதற்காக **அருட்பணி விரிவாக்கத் திட்டமும்**; தமிழின விடுதலைக்காகவும், தமிழ்நாட்டுத் தன்னுட்சிக்காகவும் **இந்து மறுமலர்ச்சி இயக்கமும்**; மதத்தால் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி இனப் பற்றும், மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் பெற்றிடச் செய்ய முடியும் என்பதற்காகக் **கடவுளை வழிபடுவோர் கழகமும்** உருவாக்கினோம்.

ஆனல், **ஆரியச் சூழ்ச்சிகள் வென்று தமிழர்களே தமிழ்மொழிப் பகைவர்களாகவும், தமிழினத் துரோகிகளாகவும், தமிழ்நாட்டு விரோதிகளாகவும்..... பெருவாரியாகச் செயல்பட்டிட்டதால்** தவத்திலும், தமிழ் வளர்ப்பதிலும், மீனுட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பிப்பதிலும் எம்மாலான பணியைச் செய்து ஒதுங்கி ஒளிவில் ஒடுக்கம் பெறுகின்றோம்.

1. கண்டப்பக் கோட்டைச் செம்பருத்திப் பிள்ளையும், 2. மிளகாய்ச் சாமி பிள்ளையும், 3. முத்தக்கூற்றத்து அம்பலமும் 4. கம்பண்ண உடையாரும், 5. நாச்சியப்பக் கவுண்டரும், 6. சொக்கேச முதலியாரும், 7. அரியநாத முதலியாரும், 8. தெய்வமலை நாயக்கரும், 9. இராமேசுவரம் கொண்டருளிய சேதுபதியும், 10. இராமநாத புரத்துத் தேவரும், 11. அழகர்மலைக் கோனும், 12.திருச்சி முதலியாரும் ...... குறிப்பிடும் படியான பணிகளைத் துணையாக எமக்குச் செய்தார்கள். இருந்தாலும், எம்மிடம் உருவானவர்களில் மந்திரவாதிகளும், சூன்யக்காரர்களும், அரைகுறைச் சோதிடர்களும், வெதும்பிப் பழுத்த பூசாறிகளும், முழுமை பெருத சிற்பிகளும் ....... அலிகளும் அதிகம். ...... அதிகம் பணமும் இன்றித் தோற்றே தமிழினம் காக்கவியலாமல் ஒடுங்கி நிறைகிறோம்.

**//மூலம்: குருதேவர் அறிக்கை: 20//**

# <u>பதினெண்சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழு</u>

## <u>Pathinen Siddhar's Medical Research Society</u>

'பதினெண்சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழு' என்ற ஓர் ஆராய்ச்சிக் குழுவைப் பதிவு செய்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தின் பூர்வக் குடிகளான (aboriginates of India) தமிழர்களின் பண்பாடு, தெய்வீகம், மருந்து, வரலாறு, இலக்கியம், ... முதலியவைகளை ஆராய்ந்து நூல்கள் வெளியிட இக்குழு அமைக்கப் படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் இக்குழுவில் உறுப்பினராகித் தொண்டு செய்ய அழைக்கப் படுகிறார்கள்.

இக்குழுவில் முழுமையான இயக்கம் <u>ஐம்பெருங்குழு</u> (5), <u>எண்பேராயம்</u> (8), <u>பேரவை</u> (48) ஆகிய மூன்று அமைப்புக்களால் (Board, Council, Society) நிர்வகிக்கப்படும்.

**Siddhar Medical Board** ஆக்கல், மறைத்தல், அருளல், காத்தல், அழித்தல் ஆகிய ஐந்துறையின் நினைவாக **'ஐம்பெருங்குழு'** எனப்படும். இந்த ஐவரில் இரண்டு பேர் பீடாதிபதியால் நியமிக்கப் படுவர். மூவர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுவர்.

ஐம்பெருங்குழு 'மணி', 'மந்திறம்' முதலிய மருத்துவ முறை நூல்கள் அச்சிடல், விரும்புகிறவர்களுக்குப் பயிற்சியளித்தல், சித்தர்கள் பற்றிய வரலாறுகள், பேருண்மைகள் வெளியிடல், ... முதலிய பணிகளைக் கவனிக்கும்.

**Siddhar Medical Council** - இது **'எண்பேராயம்'** எனப்படும். இதில் உள்ள எட்டுப் பேரில் மூன்று பேர்களைப் பீடாதிபதி நியமிப்பார். மீதி ஐவரை உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர். இக்குழு மருந்து தயாரித்தல், விற்றல், மூலிகைத் தோட்டம் போடல், மருந்து பற்றிய புத்தகங்கள் வெளியிடல், ... முதலியன கவனிக்கும்.

மூன்றுவதாகப் **'பேரவை'** ஒன்றுண்டு. 48 உறுப்பினர்கள் இதில் உண்டு. இதில் 23 இருபத்து மூன்று பேர்களைப் பீடாதிபதி நியமிப்பார். 25 பேர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இது சித்தர் மருத்துவ முறை மருந்தகங்களான கோயில்களின் பெருமை, உண்மை வரலாறு முதலியவைகளை அச்சிடல், மீண்டும் கோயில்களைப் புதுப்பித்தல், தமிழர் சமய வாழ்வு முதலியவை பற்றி நூல்கள் வெளியிடவும், நேரடிப் பணிகளில் ஈடுபடவும் செய்வர்.

சித்தர் மருத்துவம் உடலைக் காக்க, தெய்வ நெறி உயிரைக் காக்க, சமுதாயக் கொள்கை தமிழினத்தை ஒற்றுமைப் படுத்த, அரசியல் கொள்கை மொழியைக் காக்க, கலைகள் உலக மக்களை இன்பப் படுத்த, வானநூல் வருங்காலத்தை வளப்படுத்த, ... இப்படிப் பலவகைப் பயன் தரும் சித்தர்களின் செயலுக்குரிய கருத்துக்கள் நூல்களாக வெளிவரவும்; விரும்பியவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கவும் **சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழு, சித்தர் நெறி மறுமலர்ச்சிக் குழு**, ... என்று பல அமைப்புகள் பதிவு பெறும்.

Pathinen Siddhars' Siddhar Medical Council: Founder and Honarary President for-ever His Holiness Gurumahaa Sannith-aanam, Twelfth Pathinen Siddhar Peedaathipathi. He has all rights to function and form the Council, Board and Members. In addition to these, He will be in charge of the Herbal Research Forum. We the Council, Board and Society Members take an oath to be sincere and obedient to His orders and instructions. We will co-operate with Him in all affairs and we aim for the uplift of the Tamilian Culture - என்றிப்படி ஆங்கில வாசகங்கள் எழுதி கவுன்சில் உறுப்பினர்கள் சன்னிதானத்தில் நியமிக்கப் படுவார்கள்.

இந்த ஆய்வுக் குழுவில் உறுப்பினராக ரூ.2.00; மாதம் ரூ1.00 சந்தா. இவர்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் சித்தர் மருந்துகள் தயாரித்தல்; சித்தர் மருத்துவ முறையில் உயிரைப் பாதுகாக்கும் தவம், வேள்வி, ஞானம், சித்தம் முதலிய தெய்வீகக் கலைகளை எல்லா மக்களுக்கும் பயிற்றுவித்தல்; உடலை நலமாக வைத்துக் கொள்ள யோகப் பயிற்சி, ஆசனப் பயிற்சி, பச்சிலை மூலிகைகள் பற்றிய உண்மை, ... முதலியவை கற்றுக் கொடுக்கப் படும். கோயில் கட்டும் கலை, கோயிலைப் பயன்படுத்தும் முறை முதலியவை இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப் படும். ‘சாகாக் கல்வி’, ‘போகாப் புனல்’, ‘வேகாத் தலை’ ... முதலியவைகள் அவரவர் பக்குவத்துக்கேற்ப உணர்த்தப்படும்.

ஆய்வுக் குழுவில் உறுப்பினராகச் சேர்பவர்கள் உரிய பயிற்சிகளில் தேர்ச்சி பெறுவதற்கேற்பப் பழம் பிறப்புக்களையும், மறு பிறப்புக்களையும் உணர்வர். வாழ்வில் ஏற்படும் நட்பு, பகை, இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி ஆகிய ஆறும் அறிந்து; ஆறுமுகத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் உடம்பைப் பேணவும், உயிரைப் பேணவும் பதினெண்சித்தர் மருத்துவ ஆய்வுக் குழுவில் சேருங்கள்.

1. தன்னைத் தானறியும் தந்திறம் பெறலாம்.
2. மனதை வெல்லும் மந்திறம் பெறலாம்.
3. மனதைப் பொன்னுக்கும் மந்தரம் அறியலாம்.
4. செயலை முறைப்படுத்தும் இயந்திறம் அடையலாம்.
5. வருத்தும் பசி, தாகம், சோர்வு, உறக்கம், சோம்பல் முதலியவைகளை வெல்லும் மூலிகைகளைத் துய்க்கலாம்.
6. எப்போதும் சுறுசுறுப்பாயிருக்கக் குறைந்த கால அளவில் நிறைந்த பயன்பெறும் ஓகப் பயிற்சிகளைக் கற்கலாம்.
7. பெற்ற நோய்களை விட்டு விட வழிகள் தெரிந்து கொள்ளலாம்.
8. மந்திர மாயங்களால் ஆனது மட்டுமல்ல நமது தமிழர் மதமான சித்தர் நெறி. (பிறமண்ணினராகிய பிருமணர் எனும் வட ஆரியர்களின் வேத நெறி கலந்ததே இன்றைய *ஹிந்துமதம்*.)

அன்றுட உடல் வளர்ச்சி, உயிர்ப் பாதுகாப்பு இரண்டுக்கும் தேவையான இன்றியமையாத பயிற்சிகளைப் பழக்க வழக்கங்களாக, வழிபாடுகளாக, விரதங்களாக, விழாக்களாக அமைக்கப் பட்டதே **சித்தர் நெறி**. இவை மறக்கப் பட்டதால், வெறுக்கப் பட்டதால், மறுக்கப் பட்டதால் நோய்கள் பெருகி விட்டன. அனைத்தையும் தடுக்க, நலப்படுத்த, வராமல் காக்க; இனிமேல் நல்ல வளமும், வலிவும், பொலிவும் பெற உடனே பதினெண்சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழுவில் உறுப்பினராகுங்கள்.

விண்ணிலுள்ள கோள்கள் (Planets), மீன்கள் (Stars) முதலியவற்றில் ஒன்பது கோள்களும், இருபத்தேழு விண்மீன்களும் மட்டும்தான் இந்த மண்ணுலகின் மீது தங்களின் ஈர்ப்புச் சத்தியைச் (gravitational force) செலுத்துகின்றன என்ற பேருண்மையை உலகில் முதன்முதல் கண்டறிந்து கூறியவர்கள் சித்தர்கள்தான். இப்பேருண்மையின் அடிப்படையில்தான் ‘பிறப்பியல்’ (சாதகம் => ஜாதகம் = Horoscope) எனும் கலையை வளர்த்தனர். இதன் மூலம், பிறந்த குழந்தை என்னென்ன நலன்களை எந்தெந்த வயதில் பெறும்? என்னென்ன கேடுகள் எவ்வெப்போது வரும்? இவற்றை வரவேற்றுப் பயன்படுத்துவது எப்படி? தடுத்து நிறுத்தித் தப்பிப்பது எப்படி? என்பதை யெல்லாம் <u>சித்தர் நெறி எனும் தமிழர் சமயம்தான் உலகிலேயே முதன்முதல் செயலில் பெற்றுள்ளது</u>.

பிறமண்ணினராகிய பிருமணர் எனும் வடஆரியர்களின் கற்பனையும், பொய்யும், புளுகும், சுரண்டலும், ஏமாற்றும்தான் புராணங்களை நம்ப முடியாத அளவு பாழாக்கி விட்டன. உண்மையில் <u>புராணங்கள், இதிகாசங்கள் தமிழர்களின் வரலாறுகளைச் சுவையான கதைப் போக்கில் கூறுபவையே</u>. இவற்றையெல்லாம் தமிழர்க்குத் தெளிவுபடுத்திடவும்; உலகுக்கு விளக்கி உரைக்கவும் **சித்தர் நெறி மறுமலர்ச்சி பெற்றேயாக வேண்டும்**. அதற்குரிய உங்கள் பங்கு என்ன? உங்கள் தரம் என்ன? திறம் என்ன? ... என்பதை நீங்கள் எடையிட்டு அறிய உடனே பதினெண்சித்தர் மருத்துவ ஆராய்ச்சிக் குழுவில் உறுப்பினராகுங்கள்.

மருத்துவம் என்றால் 'எலும்புக்கும் சதைக்கும் செய்யப்படுவது' என்ற தவறான எண்ணம் இன்னும் உலகை ஆட்டுவிக்கிறது. உண்மையில் இவையிரண்டையும் கடந்த அருவமான; கண்ணுக்கோ, கருவிக்கோ அகப்படாத **'உயிருக்குச் செய்யப்படுவதுதான் மருத்துவம்'**. இதுதான் சித்தர் கண்ட மருத்துவம். உயிர் நோயுற்றால்தான் உடம்பு நோயுறும். உயிர், இந்த உடம்பைச் சட்டை போல் பயன்படுத்துகிறது. உடம்பு கெட்டு விட்டால்; பழைய சட்டையை, கிழிந்த சட்டையைத் தூக்கியெறிவது போல் தூர எறிந்து விட்டு உயிர் வேறோர் உடலைத் தேடிக் கொள்ளும். அதனால், உயிரை 'அமைதிப் படுத்த' (to make peaceful), 'மகிழ்ச்சிப் படுத்த' (to make pleasurable), 'திருப்திப் படுத்த'த் (to be content) தேவையான மருத்துவ முறைகள் சித்தர்களின் மருத்துவ முறையிலேயே உள்ளன.

1. எல்லா வசதியுமிருந்தும் மகிழ்ச்சியற்ற மனநிலை.
2. உடலில் புரியாத, மருந்தால் தீராத வலி.
3. நரம்புத் தளர்ச்சி.
4. காரணமில்லாத கவலை.
5. அளவு கடந்த அச்சம்.
6. விபரீதக் கனவுகள்.
7. வசதியிருந்தும் உண்ண முடியாத வயிறு.
8. சுவையில்லாத நாக்கு.
9. தற்கொலை விருப்பம்.
10. மூட்டுக்கு மூட்டு வலி, நோவு.
11. உறக்கமின்மை.
12. வாய்ப் புண்.
13. மலச் சிக்கல்.
14. முகத்தில் பொலிவில்லாமல் பிணக் களை.
15. மிகுதியான சோம்பல், உறக்கம்.
16. ஆண் பெண் இன்பக் குறைபாடு.

... ... இப் பதினாறு கேடுகளும் அகன்று; என்றும் பதினாறு வயதாக வாழ உடனே ஆய்வுக் குழுவில் சேர்ந்து இட்டும், தொட்டும், சுட்டியும் நேரடிப் பயிற்சி பெறுக.

## Siddhar Medical Treatment = சித்தர் மருத்துவ முறை

இதில் மருந்தை விட மருத்துவம் செய்யும் முறை முதன்மையானது. ‘மணி’, ‘மந்திறம்’, ‘மருந்து’ என்ற மூன்றில் முதல் இரண்டும் மட்டுமே பெரும்பகுதியாக உடையதுதான் சித்தர் மருத்துவ முறை எனப்படுவது. இந்த இரண்டும் உயிருக்கு மருத்துவம் செய்வதேயாகும். உடம்புக்கு மருத்துவம் வெறும் மருந்தால் அமைவது. இதை எல்லா மனிதர்களும் செய்யலாம். அதுதான் சித்த மருத்துவம் = Siddha medicine.

எனவே S.M.P.= Siddha Medical Practitioner, RMP (= Registered Medical Practitioner) எனப்படும் சித்த மருத்துவர்கள் அனைவருமே இந்தப் பதினெண்சித்தர்கள் மருத்துவ ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெற்று, உறுப்பினராகி ஏட்டறிவும், பயிற்சியும் பெற்றேயாக வேண்டும். சித்தர் மருத்துவம் = Siddhars Treatment; சித்த மருத்துவ முறை மருந்து = Siddha Medicines.

இந்த சித்த மருந்து முறை நோய் நீக்கலும், சித்தர் மருத்துவ முறை நோய் நீக்கலும் வேறுானவை என்பதை மிகத் தெளிவாக மருத்துவ உலகுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்தாக வேண்டும். அப்பொழுதுதான் சித்த மருத்துவர்கள் சித்தர் மருத்துவத்தைக் கற்கவும்; பொது மக்கள் முதலில் சித்தர் மருத்துவ முறையில் நோய்களுக்கு நலம் நாடிப் பிறகு **தேவைக்கேற்பச்** சித்த மருத்துவர்களையும், பிறரையும் நாடிடலாம். எனவே, இது, நமது கடமை.

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, பதினோராவது இராசிவட்டத்துக் கருவூரார், தவத்திரு, வேள்வித்திரு, மறைத்திரு, மந்தர மூர்த்தி, குருமகா சன்னிதானம், பதினெண்சித்தர் பீடாதிபதி, காவிரியாற்றங்கரைக் கொண்டருளிய கருவூரார் அருள்வது:

**"… மானுடர்களைப் பிடித்தாட்டும் காற்று, கருப்பு, பேய், பிசாசு, முன்னடியான், இருளச்சம், ஒளியச்சம், ஒலியச்சம், கனவச்சம், நினைவச்சம், நிகழ்ச்சியச்சம், இகழ்ச்சியச்சம், ஏக்கம், ஆசை, குற்றம், பொறாமை, ஆண்பாலுணர்வு, பெண்பாலுணர்வு ஆகப் பதினெட்டு வகையில் தொல்லை ஏற்பட்டுக் காரணமில்லாத காய்ச்சல், உடல் மேல் தோல் வறட்சி, மயக்கம், குமட்டல், உறக்கமின்மை, மெலிவு, பிதற்றல், உண்ணாமை, … முதலிய தொல்லைகள் ஏற்பட்டால் மந்திரித்துத்தான் அகற்ற வேண்டும். மருந்தினால் நலமேற்படாது.**

**மணி (Light Rays), மந்திறம் (Sound Waves), மருந்து (Medicine) ஆகிய மூன்று மானுடர் நோய்க்குச் சித்தர்கள் சொல்லிய நோய் நீக்கும் மருத்துவ முறைகள் ஆகும். 'மந்திறம்' மனிதர்களால் கையாளப்படும். 'மந்தரம்' சித்தர்களால் கையாளப்படும் …"**

என்கிறார்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு நெ.சேவுகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இடையிடையே குருதேவர் அவர்களின் கையெழுத்திலும் சில வரிகள் இருந்தன.//**

# சித்தர் தரும் களஞ்சியம்

(1) பதினெண்சித்தர்கள் அணுவைப் (atom) பற்றிப் பல இடங்களில் குறிக்கின்றனர். இவர்கள் தெளிவாக எண் கணிதத்தைப் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளனர். எண்ணின் மடங்கையும், அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களேயும் குறித்துள்ளனர். அதைப்போல், அணுவின் பகுதிகளேயும் குறித்துள்ளனர்.

அணு/1000 = சேன்

(2) எழுச்சிதான் ஆசை. காமம் இருந்தால்தான் உயிரோடு இருக்க முடியும். உயிருள்ள வரை காமம் இருக்கத்தான் செய்யும்.

3) பசிக்குச் சாப்பிடாத கஞ்சனும், பயந்து தொண்டனேக் கண்டிக்காத குருவும் ஒன்றே.

4) தனது கொள்கை, குறிக்கோள், தேவை முதலியவைகளே நிறைவேற்றிக் கொள்வதற்காகத் துணிவு, பணிவு, கனிவு நிறைந்த தொண்டாகவே செய்பவர்தான் குரு. ஊறுகாயை பார்த்து கொண்டே சாப்பிடுபவர் போல உலோபியாக குரு இருக்கக் கூடாது.

5) கோழை, மோழை, ஏழை, பாழை என்று தன்னம்பிக்கையற்று அடங்கி யொடுங்கி வாழ்பவர் குருவாக சிறக்க முடியாது.

6) பாசம் - கெடுதலேத் தரும். குறுகியது, வெறியானது. பாசத்தால் கேடு விளேயும். பாசமும் அன்பும் ஒன்றல்ல. அன்பு என்பது உயர்ந்தது, வலிந்தது, நன்மை தரவல்லது.

**//மூலம்: குருதேவர் அறிக்கை: 20//**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் அவர்கள் (கி.பி.785 - கி.பி.1040) தாம் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் தேவகுமாரரான இயேசுவுக்கும்; தேவதூதரான முகம்மது நபி அவர்களுக்கும் தனித்தனிக் கருவறைகள் அமைக்கத் திட்டமிட்டிருந்தார்.



இவர், தனது உலகச் சுற்றுப் பயணங்களில் தேவதூதரான முகம்மது நபி அவர்களின் சமாதியுள்ள மதினாவுக்கும், புனித தேவாலயம் உள்ள மெக்காவுக்கும், தேவகுமாரர் வாழ்ந்து செயல்பட்ட பாலத்தீன ஊர்களுக்கும் சென்று வழிபாடு செய்திட்டார். இப்படிச் சித்தர்கள் இறைவனின் குமாரரும், தூதரும், அடியாரும் உலகின் எப்பகுதியில் தோன்றினாலும் அவர்களை ஏற்றுப் போற்றி வழிபடும் பொதுவுடைமைப் போக்குடையவராகவே வாழ்ந்திருக்கின்றனர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com